DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, WALAJAPET RANIPET DISTRICT.

STC No.44/2023

Deposition of Witness for – Prosecution : DW1
Defence :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதாசிவம் | ஜாதி | : | |
| த/பெ | : | தட்சிணாமூர்த்தி | மதம் | : | |
| கிராமம் | : | வாலாஜாபேட்டை | தொழில் | : | மரவியபாரம் |
| வட்டம் | : | வாலாஜாபேட்டை | வயது | : | 48/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 25.11.2024**

**மனுதாரர் மனுவின் பேரில் ஆஜர் இல்லை மனுதாரர் வழக்கறிஞர் ஆஜர்**

**<u>முதல் விசாரணை: எ. ம.சா.1</u>**

1) நான் இவ்வழக்கில் எதிரி ஆவேன். கடந்த 2020 ம் ஆண்டு வாலாஜா Housing board சார்ந்த STD பெருமாள் என்பவரிடம் 5 லட்சம் சீட்டு 2020 ம் ஆண்டு ஜனவரியில் சேர்ந்தேன். அதே ஆண்டில் மார்ச் மாதத்தில் சீட்டை நான் ஏலத்திற்கு 1.90 ஆயிரத்திற்கு தள்ளி எடுத்தேன். அதற்கு மேற்படி பெருமாள் என்பவர் பிணையாக இந்தியன் காசோலை கேட்டார். அன்றைய தினமே காசோலையை பிணையாக கொடுத்தேன். அந்த காசோலையில் எனது கையெழுத்து மட்டும் தான் செய்தேன். எதுவும் எழுதி நிறப்படவில்லை. அந்த ஏலச்சீட்டானது 2021 ம் ஆண்டு முடிந்து விட்டது. எனவே பெருமாளிடம் நான் பிணையாக கொடுத்த காசோலையை திருப்பி கேட்டேன்.

2) நான் அவரிடம் ஏலச்சீட்டிற்கு சேர்ந்த போது வாடகை வீட்டில் இருந்தார். பின்பு அவர் சொந்த வீட்டிற்கு சென்றுவிட்டார். அந்த வீடு மாறும் பணியில் நான் கொடுத்த காசோலை எங்கு வைத்தேன் என்று தற்போது தெரியவில்லை என்று கூறினார். தெரிந்த நபர் என்பதால் நான் பெரியதாக கேட்டுக்கொள்ளவில்லை. பின்பு 2022 ம் ஆண்டு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணை பெற்ற பின்பு தான் காசோலை வழக்கு செங்கைய்யபாபு என்பவரை வைத்து போடப்பட்டது என்று தெரிந்து கொண்டேன். இவ்வழக்கின் முறையீட்டாளரான செங்கைய்ய பாபு யார்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNRP0E0006092023/truecopy/order-5.pdf

என்று தெரியாது. நான் பெருமாளிடம் பிணையாக கொடுத்த காசோலையை வைத்து பொய்யான வழக்கு போடப்பட்டுள்ளது. நான் பெருமாள் என்பவரிடம் பிணையாக காசோலை மட்டும் தான் கொடுத்தேன். ஆனால் இவ்வழக்கில் பொய்யாக கடனுறுதி சீட்டு நான் கொடுத்ததாக தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வருவதற்கு முன்பாக எதிர் தரப்பினர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** - ஒத்திவைக்கப்படுகிறது.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K
Date: 2024.11.25 18:08:59 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
வாலாஜாபேட்டை.

www.ecourtsindia.com
This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNRP0E0006092023/truecopy/order-5.pdf